**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 03.05.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நிதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ஆர்.பாலசுப்ரமணியன் மற்றும் டாக்டர் ஜோரம் அனியா ஆகியோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற 5 மாநில சட்டப்பேரவை தேர்தல்களின் வாக்கு எண்ணிக்கை நாளை பெறுகிறது.

தூய்மை எரிசக்தி பயன்பாட்டில் நாடு குறிப்பிடத்தக்க இலக்கை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாளை முதல் அகில இந்திய அளவிலான ‘தீ பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்க உள்ளது.

*பிரதமர் வாழ்த்து நிதி ஆயோக் (09)*

நிதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினர்களாக டாக்டர் ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் டாக்டர் ஜோரம் அனியா நியமிக்கப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் வளர்ச்சிக்கான வலுவான கொள்கை

முடிவுகளை உருவாக்குவதில் இவர்களின் நீண்ட கால ஆழ்ந்த அனுபவங்கள் வழி கோலும் எனக் கூறிய பிரதமர், பல்வேறு துறைகளில் புத்தாக்கத்துடன் கூடிய வளர்ச்சி இதன் மூலம் சாத்தியமாகும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

*பிரதமர் வாழ்த்து மிஷன் திரிஷ்டி (11)*

பெங்களூருவை தளமாக கொண்ட ஸ்டார்ட் அப் நிறுவனமான GalaxEye- தனது திரிஷ்டி செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது. இது உலகின் முதல் OptoSAR செயற்கைக் கோள் ஆகும். பூமியைக் கண்காணிக்க வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ள இந்த வகையான முதல் செயற்கைக் கோள் புதுமைப் படைப்புகளிலும், தேசக்கட்டமைப்பிலும், இளைஞர்கள் கொண்டுள்ள ஆர்வத்திற்கு சான்றாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். GalaxEye-யின் ஒட்டுமொத்த குழுவிற்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவில் தனியார் துறையால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய செயற்கைக் கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது ஒரு முக்கிய சாதனையாக திகழ்வதாக தமது வாழ்த்துச் செய்தியில் பதிவிட்டுள்ளார்.

*வாக்கு எண்ணிக்கை -1 (10)*

புதுச்சேரி, கேரளம், தமிழ்நாடு, அஸாம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன. வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள அனைத்து மையங்களிலும், அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவாக செய்யப்பட்டுள்ளன. புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் மையங்களில் 3 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல்

அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்... **(வாய்ஸ்)**

*வாக்கு எண்ணிக்கை வாய்ஸ் 2 (17)*

**(வாய்ஸ்)**

புதுச்சேரியில் வாக்கு எண்ணிக்கை, லாஸ்பேட்டை மகளிர் பொறியியல் கல்லூரி, தாகூர் கலைக்கல்லூரி மற்றும் மோதிலால் நேரு அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய 3 மையங்களில் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார். மேலும், வாக்கு எண்ணிக்கை நாளை காலை 8 மணிக்கு தொடங்கவுள்ளதாகவும், முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு பின்னர் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்றும் தெரிவித்தார். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் முடிவும் தனித்தனியாக அறிவிக்கப்பட்டு மாலை 4 மணிக்குள் அனைத்து முடிவுகளும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக கூறிய திரு. குலோத்துங்கன், வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு கைப்பேசி கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், முகவர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் புதிய விதிமுறைப்படி QR code வசதியுடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் வசதிக்காக ஒவ்வொரு சுற்றின் முடிவும் உடனுக்குடன் ஒலிபெருக்கி மற்றும் தகவல் பலகைகள் மூலம் அறிவிக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும், திரு.குலோத்துங்கன் கூறியுள்ளார்.

*வாக்கு எண்ணிக்கை 3 (19)*

காரைக்கால் பிராந்தியத்தின் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதுநிலை மையத்திலும், மாஹே பிராந்தியத்தில் ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப் பள்ளியிலும், ஏனாம் பிராந்தியத்தில்

டாக்டர் S.R.K. அரசு கல்லூரியிலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு அச்சு சீட்டு எண்ணிக்கைக்காக யூனியன் பிரதேசம் முழுவதும் மொத்தம் 166 எண்ணிக்கை மேசைகள் அமைக்கப்பட்டுள்ளன. அஞ்சல் வாக்குச் சீட்டு எண்ணிக்கைக்காக 35 மேசைகள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் பணியில் 859 பேர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களை திரு. குலோத்துங்கன் தலைமையிலான அதிகாரிகள் ஆய்வு செய்தனர். பொதுமக்கள் தேர்தல் முடிவுகளை http://results.eci.gov.in என்ற இணைய தளத்தின் மூலமாக உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகள் தொடர்பான சரிபார்க்கப்பட்ட மற்றும் அதிகாரப்பூர்வ தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புகள் மூலம் மட்டுமே பொதுமக்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் உள்ளிட்டோர் அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

*வாக்கு எண்ணிக்கை 4 (03)*

மேலும், வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதையொட்டி நாளை மதுபானக்கடைகள், ரெஸ்டோபார், சாராயம் மற்றும் கள்ளுக்கடைகளை மூட வேண்டும் என கலால் துறை உத்தரவிட்டுள்ளது.

*மேற்கு வங்கம் (11)*

மேற்கு வங்க மாநிலம், தெற்கு-24 பர்கானாஸ் மாவட்டத்திலுள்ள Falta சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவை இந்திய தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது. இத்தொகுதியிலுள்ள 285 வாக்குச்சாவடிகளிலும் வரும் 21ஆம் தேதி மறு வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை 24ஆம் தேதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 29ஆம் தேதி நடைபெற்ற வாக்குப்

பதிவின்போது அனுமதியில்லாத நபர்கள் வாக்குச்சாவடிகளுக்குள் நுழைந்து கள்ள ஓட்டுப் போட்டது உட்பட கடுமையான தேர்தல் விதி மீறல்கள் நடந்ததாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது

*கிரண் ரிஜிஜூ (09)*

அரசு அமைப்புகள், தேர்தல் ஆணையம், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றை அனைத்து எதிர்க்கட்சிகளும், தொடர்ந்து தாக்கி வருவதாகவும், தற்போது நீதித்துறையை இலக்காகக் கொண்டுள்ளதாகவும் பாஜகவின் மூத்த தலைவரும், மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சருமான திரு.கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார். இந்த எதிர்க்கட்சிகள் நாட்டின் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே தாக்கி வருகின்றன என்பதை உணராமல் இருப்பதாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*தீ பாதுகாப்பு வாரம் (12)*

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தொடர்புடைய மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளுடன் இணைந்து, நாடு முழுவதும் உள்ள சுகாதார நிலையங்களில் தீ விபத்துகளைத் தடுத்தல் மற்றும் அவற்றின் பாதிப்புகளைக் குறைத்தலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாளை முதல் அகில இந்திய அளவிலான 'தீ பாதுகாப்பு வாரத்தை' கடைப்பிடிக்க உள்ளது. மத்திய சுகாதாரச் செயலாளர் திருமதி. புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா நாளை தீ பாதுகாப்பு

வாரத்தைத் தொடங்கி வைப்பதுடன், தீ பாதுகாப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிக்கும் தலைமை வகிக்கிறார். தீ பாதுகாப்பு வாரத்தை ஒட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*தெலங்கானா– சிவபிரதாப் (11)*

தெலங்கானா ஆளுநர் திரு. சிவ பிரதாப் சுக்லா மருத்துவம் என்பது வெறும் தொழில் மட்டுமல்ல, மனித குலத்திற்கு சேவை செய்ய வேண்டிய புனிதமான கடமை என்று கூறியுள்ளார். அவர் நேற்று ஹைதராபாத்தில் உஸ்மானியா மருத்துவக் கல்லூரியின் 175-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், சேவையே மிக உயர்ந்த கடமை என்று பொருள்படும் "சேவா பரம் தர்மம்" என்ற உணர்வுடன் நாட்டு மக்களுக்கு மருத்துவர்கள் சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பல ஆண்டுகளாக அர்ப்பணிப்பு மற்றும் திறமையான மருத்துவர்களை உருவாக்கிய உஸ்மானியா மருத்துவக் கல்லூரியை ஒரு மதிப்புமிக்க நிறுவனம் என்று அவர் பாராட்டினார். அனைத்து மருத்துவ மாணவர்களுக்கும் பட்டம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

*பிரல்ஹாத் ஜோஷி- 1 - (04)*

தூய்மை எரிசக்தி பயன்பாட்டில் நாடு குறிப்பிடத்தக்க இலக்கை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்… **(வாய்ஸ்)**

*பிரல்ஹாத் ஜோஷி- 2 வாய்ஸ் (09)*

**(வாய்ஸ்)**

நாடு முழுவதும் 45 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சூரிய சக்தியை பயன்படுத்துவதாக அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார். மேலும், தூய்மையான, வலுவான எரிசக்தி பாதுகாப்பு என்பது அதிக சுயசார்பை உறுதி செய்யும் மத்திய அரசின் நடவடிக்கையின் ஒருபகுதியாக, பிரதமரின் சூரிய சக்தி வீடுகள் இயக்கம் விரிவுபடுத்தப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனிடையே சர்வதேச சூரிய தினத்தையொட்டி, "சூரியனுக்காக ஓடு" என்ற கருப்பொருளில் மாரத்தான் ஓட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. அதிகரித்து வரும் எரிசக்தி பயன்பாட்டிற்கு மாற்றாக சூரிய சக்தியை பயன்படுத்துவதன் அவசியம் குறித்து அப்போது எடுத்துரைக்கப்பட்டது.

*பத்திரிக்கை சுதந்திர தினம் (07)*

எதிர்கால அமைதியை வடிவமைத்தல் என்ற கருப்பொருளுடன் இன்று உலக பத்திரிக்கை சுதந்திர தினம் கடைபிடிக்கப்படுகிறது. நாடு முழுவதும் பத்திரிக்கை சுதந்திரத்தின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தொழில்நுட்ப உதவியுடன் மனித உரிமைகள் மற்றும் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்தி தகவல் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் பத்திரிக்கைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

*ஹார்மூஸ் (09)*

மார்ஷல் தீவுகளின் கொடியுடன் பயணிக்கும் M.T. Sarv Shakti திரவ எரிவாயுக் கப்பல் ஹார்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பாக கடந்துள்ளது. 46 ஆயிரத்து 313 மெட்ரிக் டன் LPG-யுடன் கூடிய இந்தக் கப்பல் வரும்13ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகத்தை வந்தடையும் என கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகம் கூறியுள்ளது. இதனிடையே

வளைகுடா மற்றும் மேற்காசிய நிலவரம் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள இந்திய சமூகத்தினரின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் உறுதி செய்யப்படுவதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மாஹே ஓய்வூதியம் (09)*

மாஹே துணை கருவூலத்திலிருந்து ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் அல்லது சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் போன்ற சேவைகளைப் பெறுவோர் தங்கள் ஆயுள் சான்றிதழை நாளை முதல் வரும் 29ஆம் தேதி வரை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேரில் ஆஜராக முடியாதவர்கள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் வழங்கப்பட்ட ஆயுள் சான்றிதழை, தபால் மூலமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ அனுப்பலாம். www.jeevanpramaan.gov.in என்ற இணையதளம் மூலமாக சமர்ப்பித்து, அதன் நகலை அனுப்ப வேண்டும்.

*டெல்லி தீ விபத்து (09)*

டெல்லியில் விவேக் விகார் பகுதியில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். அடுக்கு மாடி குடியிருப்பில் 4ஆவது தளத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க 14 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், இன்று காலை 6.30 மணிக்குள் தீ முற்றிலும் அணைக்கப்பட்டதாகவும், டெல்லி தீயணைப்புத் துறை அதிகாரி கூறினார். இந்த மீட்பு பணியின் போது 15 பேர் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த துயரமான சம்பவத்திற்கு டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. தரன்ஜித் சிங் சந்து மற்றும் டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

*விளையாட்டு (07)*

ஒடிசா மாநிலத்தின் தலைநகர் புவனேஷ்வரில் நடைபெற்று வரும் தேசிய உள்ளரங்கு தடகளப் போட்டியில் ஆடவர் போல்வால்ட் பிரிவில் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த குல்தீப் குமார் தங்கம் வென்றுள்ளார். அவர் 5.41 மீட்டர் உயரம் தாண்டி இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

ஐபிஎல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இன்றிரவு 7.30 மணிக்கு அகமதாபாத், நரேந்திர மோடி விளையாட்டு அரங்கில் நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதுகின்றன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நிதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினர்களாக டாக்டர் ஆர்.பாலசுப்ரமணியன் மற்றும் டாக்டர் ஜோரம் அனியா நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி, கேரளம், தமிழ்நாடு, அஸாம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் வாக்குகள் எண்ணிக்கை நாளை நடைபெறுகிறது.

தூய்மை எரிசக்தி பயன்பாட்டில் நாடு குறிப்பிடத்தக்க இலக்கை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாளை முதல் அகில இந்திய அளவிலான 'தீ பாதுகாப்பு வாரம்' கடைப்பிடிக்கப்பட உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/MS/VM**